




ISSN: 2582–5518

புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351









## மருத்துவ மேற்படிப்பு மாணவர்களுக்கான உதவித் தொகை

# திட்டவட்டம்

## "நீதிமன்ற உத்தரவின்படி கல்விக் கட்டணத்தைச் செலுத்தியுள்ள மாணவர்கள், கூடுதல் கட்டணத்தை செலுத்துவதாக உத்தரவாதம் அளித்துள்ளனர்; உயர் நீதிமன்றம்

**சென்னை, ஜூலை. 23-**

**மருத்துவ மேற்படிப்பு படிக்கும்போது, மாணவர்கள் ஆற்றிய பணிக்கான உதவித்தொகையை வழங்குவதற்கு மருத்துவக் கல்லூரிகள் மறுப்பு தெரிவிக்க முடியாது என சென்னை உயர் நீதிமன்றம் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.**



புதுச்சேரியில் உள்ள மகாத்மா காந்தி மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், அறுபடை வீடு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மருத்துவ மேற்படிப்பு மாணவர்கள், தாங்கள் படிக்கும் காலத்தில் மருத்துவமனைகளில் ஆற்றிய பணிக்கான உதவித்தொகையை வழங்கக்கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தனர்.

இந்த வழக்குகளை விசாரித்த உயர்நீதிமன்ற தனி நீதிபதி, இந்திய மருத்துவ கவுன்சில் விதிகளின்படி, நான்கு வாரங்களில் மாணவர்களுக்குரிய உதவித்தொகையை வழங்க வேண்டும் என மருத்துவ கல்லூரிகளுக்கு 2021ம் ஆண்டு உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இந்த உத்தரவை எதிர்த்து மகாத்மா காந்தி மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், அறுபடை வீடு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மேல் முறையீட்டு வழக்குகளை, தலைமை நீதிபதி கங்கபுர்வாலா மற்றும் நீதிபதி ஆதிகேசவலு ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரித்தது.

அப்போது மருத்துவ கல்லூரிகள் தரப்பில், "மாணவர்கள் தங்கள் கல்விக் கட்டணத்தை செலுத்தாததால், உதவித்தொகை கோர உரிமையில்லை. கட்டணம் தொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. அந்த வழக்கில் கல்லூரிகளுக்குசாதகமாக தீர்ப்பளிக்கப்பட்டால், தற்போது நாட்டை விட்டு வெளியேறிவிட்ட மாணவர்களிடம் இருந்து வசூலிப்பது சிரமம்" என்று வாதிடப்பட்டது.

அப்போது மாணவர்கள் தரப்பில், "உயர்நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் தற்காலிக கட்டணம் செலுத்தியுள்ளோம். அதுவும் அதிகமான கட்டணமே செலுத்தி இருக்கிறோம். மூன்று ஆண்டுகள் தங்களிடம் இருந்து உழைப்பை பெற்றுக் கொண்ட நிலையில் மருத்துவக் கல்லூரிகள் உதவித்தொகை வழங்க மறுக்க முடியாது" என வாதிடப்பட்டது.

இதையடுத்து கல்லூரிகள் தரப்பு வாதத்தை ஏற்க மறுத்த நீதிபதிகள், "நீதிமன்ற உத்தரவின்படி கல்விக் கட்டணத்தைச் செலுத்தியுள்ள மாணவர்கள், கூடுதல் கட்டணத்தை செலுத்துவதாக உத்தரவாதம் அளித்துள்ளனர். எனவே, அவர்ளுக்கு உதவித்தொகை வழங்க முடியாது என மருத்துவ கல்லூரிகள் கூற முடியாது. விதிகளின்படி ஆறு வாரங்களுக்குள் மாணவர்களுக்கு வழங்க வேண்டிய உதவித்தொகையை வழங்க வேண்டும் என மருத்துவக்கல்லூரிகளுக்கு உத்தரவிட்டு, வழக்கை தள்ளுபடி செய்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைச்சரவைக் கூட்டம்
## தொழில் முதலீடுகள், அரசியல் சூழல் குறித்து ஆலோசனை

**சென்னை, ஜூலை. 23-**

புதிய தொழில் முதலீடுகள், விரிவாக்கம், அமைச்சர்கள் மீதான அமலாக்கத் துறை நடவடிக்கை, அரசியல் சூழல் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.



தமிழக பொருளாதாரத்தை வரும் 2030-ம் ஆண்டுக்குள் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலராக உயர்த்தும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்காக தொழில் முதலீடுகளை ஈர்க்கும் நடவடிக்கையில் தமிழக அரசு இறங்கியுள்ளது. இதன் அடிப்படையில் வரும் 2024 ஜனவரி மாதம் உலக முதலீட்டாளர்கள் மாநாடு சென்னையில் நடைபெற உள்ளது.

இதற்கிடையே, சமீபத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் சிங்கப்பூர், ஜப்பான் நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டார். அப்போது, தொழில் தொடர்பாகவும், சேவைகள் தொடர்பாகவும் பல்வேறு தரப்பினருடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. சிங்கப்பூர், ஜப்பான் முதலீட்டாளர்களை முதலீட்டாளர் மாநாட்டில் பங்கேற்க வருமாறும் முதல்வர் அழைப்பு விடுத்து வந்தார்.

இதன் தொடர்ச்சியாக, பல்வேறு தொழில் நிறுவனங்கள் தங்கள் முதலீடுகளுக்காக அரசை அணுகியுள்ளன. தொழில் விரிவாக்கம் தொடர்பாகவும் பல நிறுவனங்கள் தொழில்துறையுடன் பேசி வருகின்றன இதுதவிர, தமிழகத்தில் வரும் செப்.15-ம் தேதி முதல் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், தமிழக அமைச்சரவைக் கூட்டம் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று காலை தொடங்கி நடைபெற்றது. புதிய தொழில் திட்டங்கள், கலைஞர் உரிமைத் தொகை உள்ளிட்ட அரசின் மக்கள் நலத்திட்டங்கள் தொடர்பாக இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

மேலும், தொழில் முதலீடு, அரசு திட்டங்கள் தவிர்த்து அரசியல் ரீதியாக, அமைச்சர்கள் மீதான அமலாக்கத் துறைநடவடிக்கைகளை எப்படி எதிர்கொள்வது என்பது குறித்தும் விவாதிக்கப் பட்டதாகவும் கூறப்படுகிறது. இக்கூட்டத்தில், தற்போது புழல் சிறை மருத்துவமனையில் உள்ள இலாகா இல்லாத அமைச்சர் வி.செந்தில்பாலாஜி தவிர்த்து பொன்முடி உள்ளிட்ட மற்றவர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.




▶ புதுக்கோட்டை கம்பன் கழகத்தின் 48 ஆம் ஆண்டு கம்பன் பெருவிழா புதுக்கோட்டை நகர்மன்ற வளாகத்தில் ஜூலை 14ஆம் தேதி வெள்ளிக்கிழமை தொடங்கியது. இன்று நிறைவடைகிறது. 9ம் நாள் விழாவான பரிசளிப்பு மற்றும் சந்திப்பு வளையம் நிகழ்ச்சியில் தொழிலதிபர் திண்டுக்கல் ரெத்தினம் தலைமை வகித்தார். அதனைத் தொடர்ந்து திருவாரூர் சண்முக வடிவேல் நடுவராக பங்கேற்ற பட்டிமன்றத்தில் முன்னாள் எம்எல்ஏ ராமசுப்புராம், உள்ளிட்ட காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் பங்கேற்று சிறப்பித்தனர். நிகழ்வில் கம்பன் கழக தலைவர் ராமச்சந்திரன், செயலாளர் சம்பத்குமார், துறை திவ்யநாதன், சந்திரசேகரன், விஜய ரவி பல்லவராயர், தனபதி, தினகரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

## நீதிமன்ற உத்தரவையடுத்து மங்களநாடு கிராமத்தை சேர்ந்த பட்டியலின மக்கள் கோவிலுக்குள் தரிசனம்

**அறந்தாங்கி, ஜூலை.23-**

அறந்தாங்கி அருகே மங்களநாடு வடக்கு கிராமத்தில் வசிக்கும் பட்டியலின மக்கள் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவுபடியும் ஏற்கனவே வருவாய் கோட்டாட்சியர் தலைமையில் நடைபெற்ற சமாதான கூட்டத்தின் அடிப்படையிலும் நேற்று அந்த கிராமத்தில் உள்ள மங்களநாயகி அம்மன் கோயிலில் போலீஸாரின் பாதுகாப்போடு கோயிலுக்குள் சென்று முதல்முறையாக சாமி தரிசனம் செய்துள்ளனர்.



புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே மங்களநாடு வடக்கு கிராமத்தில் மங்களநாயகி அம்மன் கோயில் அமைந்துள்ளது. இந்த கிராமத்தில் ஐந்துக்கும் மேற்பட்ட சமூக மக்கள் 2000க்கும் மேற்பட்டோர் வசித்து வரும் சூழலில் பட்டியல் இனத்தைச் சேர்ந்த 30-க்கும் மேற்பட்ட குடும்பங்களை மட்டும் இந்த கோயிலுக்குள் தலைமுறை தலைமுறையாக சாமி கும்பிட அனுமதிப்பதில்லை என பட்டியலின சமூகத்தைச் சேர்ந்த மதி முருகன் என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் மனு தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனு கடந்த சில நாட்களுக்கு முன்பு விசாரணைக்கு வந்த போது பட்டியலின சமூக மக்களை கோயிலுக்குள் அனுமதிக்காத சம்பவம் அதிர்ச்சி அளிப்பதாகவும் நாடு சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் ஆகும் நிலையில் பட்டியல் இன சமூக மக்களை கோயிலுக்குள் அனுமதிக்காதது தலைகுனிவை ஏற்படுத்தி உள்ளதாகவும் அனைத்து ஜாதியினரும் கோயிலுக்குள் செல்லவும் சாமி தரிசனம் செய்யவும் உரிமை உண்டு எனவும் இந்த வழக்கில் மனுதாரர் பட்டியல் சமூகம் என்பதால் அவரை சார்ந்த சமுதாயத்தினரையும் கோவிலுக்குள் அனுமதிக்க வேண்டும் என்றும் பிறப்பால் ஒருவர் தங்களை உயர்ந்தவராகவும் மற்றவரை தாழ்ந்தவராகவும் நினைக்ககூடாது என்றும் இதுபோன்ற தீண்டாமை செயலை இந்த நீதிமன்றம் வேடிக்கை பார்க்காது என்றும் நீதிபதி பி.டி. ஆஷா கூறியிருந்தார்.

மேலும் சம்பந்தப்பட்ட கோவிலுக்குள் அனைத்து தரப்பினரும் சாமி தரிசனம் செய்வதை உறுதி செய்ய வேண்டும் என்றும் இதில் ஏதேனும் பிரச்சனை ஏற்பட்டால் அறந்தாங்கி கோட்டாட்சியர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்என்றும்சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏதும் நடந்தால் சம்பந்தப்பட்டவர்கள் மீது குண்டத்தடுப்பு சட்டத்தின் கீழ் போலீசார் வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் நீதிபதி உத்தரவு பிறப்பித்து இருந்தார்.

அதன் அடிப்படையில் கடந்த பதினெட்டாம் தேதி அறந்தாங்கி கோட்டாட்சியர் ஜஸ்டின் ஜெயபால் தலைமையில் நடைபெற்ற சமாதான கூட்டத்தில் மங்களநாடு மங்களநாயகி அம்மன் கோயிலில் அனைத்து சமூக மக்களும் ஒரே நேரத்தில் சாமி தரிசனம் செய்வது எனவும் பட்டியலின சமூக மக்களிடமும் பாகுபாடு இன்றி வரி வசூல் செய்வதோடு திருவிழா உள்ளிட்ட அனைத்து விழாக்களிலும் அனைத்து சமூக மக்களும் இணைந்து சாமி தரிசனம் செய்வதென முடிவெடுக்கப்பட்டது.

அதனை உறுதிப்படுத்தும் விதமாக இன்று அனைத்து சமூக மக்களும் ஒரே நேரத்தில் வழிபாடு நடத்த வருமாறு வருவாய் துறையினர் அழைப்பு விடுத்திருந்த நிலையில் பட்டியல் இன சமூக மக்கள் மட்டும் முதல்முறையாக கோயிலுக்குள் சென்று வழிபாடு நடத்தினர். பல தலைமுறைகளாக தங்கள் கிராமத்தில் உள்ள மங்களமாகிய அம்மன் கோயில் சென்று வழிபட முடியாத சூழலில் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவின் அடிப்படையில் நேற்று முதல்முறையாக கோயிலுக்குள் சென்று வழிபாடு நடத்தியது தங்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதாகவும் இது நிரந்தரமாக நீடிக்க வேண்டும் என்றும் அந்த கிராமத்தை சேர்ந்த பட்டியலின மக்கள் தெரிவித்துள்ளனர்.

## மணிப்பூர் அதிர்ச்சிகள் அடுத்தடுத்து வெளிச்சத்துக்கு வரும் பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள்

**இம்பால், ஜூலை. 23-**

மணிப்பூரின் தௌபால் மாவட்டத்தில் மூன்று பெண்கள் நிர்வாணப்படுத்தப்பட்டு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்ட சம்பவம் நடந்து இரண்டு நாட்களுக்கு பின்னர், மே 6-ம் தேதி 45 வயது பெண் ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு எரித்து கொலை செய்யப்பட்டுள்ளார். அவரது எரிந்த உடலின் புகைப்படம் தற்போது இணையத்தில் பரவி வருகிறது. வடகிழக்கு மாநிலமான மணிப்பூரில் மே 3-ம் தேதி கலவரம் தொடங்கியதில் இருந்து அங்கு பெண்களுக்கு எதிராக நடந்து வரும் வன்கொடுமைகளின் தொடர்ச்சியான சம்பவங்களில் இந்தக் கொடூரமும் ஒன்று.



கடந்த மே 4-ம் தேதி தௌபால் மாநிலத்தில் பழங்குடியின பெண்களை நிர்வாணப்படுத்தி ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்ட சம்பவம் ஜூலை 19-ம் தேதி வீடியோ மூலம் வெளியாகி தேசத்தை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. மாநிலத்தில் இணையத் தடை முழுமையாக விலக்கிக் கொள்ளப்படாத நிலையிலும், அந்தத் கொடூரம் வெளியே வந்துள்ளது. அந்த வன்கொடுமைத் தொடர்பாக இதுவரை 5 பேரை போலீஸார் கைது செய்துள்ளனர்.

தௌபால் சம்பவம் வெளியானதைத் தொடர்ந்து, வியாழக்கிழமை (ஜூலை 20) மாநிலத்தில் ஆளும் பாஜகவின் 7 பேர் உள்ளிட்ட 10 குகி சமூகத்தைச் சேர்ந்த 10 எம்எல்ஏகள், மே 3-ம் தேதியில் இருந்து அந்தச் சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட அல்லது கொலை செய்யப்பட்ட நான்கு சம்பவங்களைக் குறிப்பிட்டு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

பெரிய கலவரக் கும்பல் ஒன்று கிராமத்தைத் தாக்கி அழித்த அடுத்த நாள், இரண்டு குழந்தைகளின் தாய் ஒருவரின் பாதி உடலை தான் பார்த்தாக, பீடைச்சிங் கிராமத்தின் பாதிரியார் தியானா வைபேயி சவுன்டாக் 'தி இந்து' ஆங்கில நாளிதழிடம் தெரிவித்துள்ளார். ராணுவத்தினரின் பாதுகாப்புடன் அவர் கிராமத்துக்குள் சென்றிருக்கிறார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், "அந்தப் பெண்ணின் உடல் பாதி எரிந்திருந்தது. அவர் ஆடையின்றி இருந்தார். அவரது உடலை இம்பால் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார்கள். இப்போது, அந்த உடல் எங்கே இருக்கிறது என்று எங்களுக்குத் தெரியாது. மே 6-ம் தேதி கிராமத்துக்குள் நுழைந்த அந்தக் கும்பல் கறுப்பு உடைகள் அணிந்திருந்தனர். மணிப்பூர் மாநில கமாண்டோ வீரர்களும் அவர்களுடன் இருந்தனர்.

எங்கள் வீடுகள் தீ வைக்கப்பட்டு அழிக்கப்பட்ட பின்னர் கிராமத்தில் உள்ளவர்கள் அங்கிருந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போது தனியாக வாழ்ந்து வந்த ஒரு பெண்ணால் ஓடி வெளியேற முடியவில்லை. கலவரக் கும்பல், அவரைப் பிடித்துக் கொண்டனர். பின்னர் அவர்கள், அவரை கொலை செய்து உடலைச் சிதைத்தனர். இதுகுறித்து நான் அளித்த புகாரின்படி, காங்போக்பி மாவட்ட காவல் நிலையத்தில் கலவரம், கொலை செய்தல், தீவைத்தல் போன்ற குற்றங்களுக்காக ஜீரோ எஃப்ஐஆர் பதிவு செய்யப்பட்டுள்ளது.

க்ஷபோலீஸார் எங்களுக்கு உதவுவார்கள் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். மாறாக, அவர்கள் எங்களை நோக்கிச் சுட்டனர். கிராமத்தின் தன்னார்வலர்களும் ஓடிவிட்டனர். அது ஒரு கொடூரமான சூழ்நிலை. இதற்கு முன் அப்படி ஓர் அனுபவம் எனக்கு ஏற்பட்டதில்லை" என்று அந்த பாதிரியார் தெரிவித்தார்.

காங்போக்பி மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள மற்றொரு ஜீரோ எஃப்ஐஆர் தகவலின்படி, மே 4-ம் தேதி, கிழக்கு இம்பாலில் இரண்டு பெண்கள் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு, சித்ரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளனர். அந்தப் பெண்கள் கிழக்கு இம்பாலில் உள்ள கார்கள் சுத்தம் செய்யும் கடை ஒன்றில் வேலை செய்துள்ளனர். கொல்லப்பட்ட பெண்களில் ஒருவரது தாயார் கொடுத்த புகாரின் அடிப்படையில் எஃப்ஐஆர் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதில், "கோனுங் மாமாங் அருகே உள்ள அவர்களின் வாடகை வீட்டில் 100 முதல் 200 பேர் கொண்ட கும்பல்களால் அவர்கள் சித்ரவதை செய்யப்பட்டனர்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தப் பெண்களின் உடல் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று அந்த தாய் வேதனையாக தெரிவித்துள்ளார்.

இந்த எஃப்ஐஆர் பின்னர் மே 16-ம் தேதி போரோம்பட் காவல் நிலையத்துக்கு மாற்றப்பட்டது. இது குறித்து அடையாளம் தெரியாத குற்றவாளிகளுக்கு எதிராக, உள்நோக்கத்துடன் தாக்குதல், கடத்தல், கொலை செய்வதற்காக கடத்துதல், தவறாக மறைத்து வைத்தல், பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்தல் போன்ற குற்றங்களுக்காக பதிவு செய்யப்பட்டுள்ளன.

மணிப்பூரில் மைதேயி சமூகத்துக்கும் பழங்குடியினர் அந்தஸ்து வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்து குகி சமூக மக்கள் நடத்திய அமைதி பேரணியில், அவ்விரு சமூகத்தினருக்கும் இடையே கடந்த மே 3-ம் தேதி முதல் மோதல் ஏற்பட்டது. சுமார் 2 மாதங்களுக்கும் மேலாக நீடிக்கும் கலவரத்தில் இதுவரை 142 பேர் உயிரிழந்துள்ளனர். 500-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். 65,000 பேர் வீடுகளை இழந்து அகதிகளாகி உள்ளனர். இதுவரை 5,995 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மணிப்பூர் மக்கள் தொகையில் 53 சதவீதம் மைதேயி மக்களே உள்ளனர். பெரும்பாலும் இவர்கள் இம்பால் சமவெளிப்பகுதிகளில் வாழ்கின்றனர். நாகா, குகி போன்றவர்களை உள்ளடக்கிய பழங்குடியின மக்கள் 40 சதவீதம் உள்ளனர். இவர்கள் பெரும்பாலும் மலை மாவட்டங்களில் வசிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இன்று

# 23-7-2023




இஞ்சி சாறு தேன் கலந்து குடித்தால் தலை சுற்றல் தீரும்
சக வருடம் 1945 சிராவணம் 01

| சோபகிருது ஆடி 7 | JUL - SUN ஞாயிறு | முஹர்ரம் 4 வளர்பிறை 204 / 161 | இராசிபலன் |
|---|---|---|---|
| வளர். பஞ்சமி 08.50 (கா. 09.33) உத்திரம் 30.13 (மா. 06.06) தியாஜ் 52.39 அகஸ் 31.16 அமிர்த. ஷஷ்டி விரதம். சங்கரன்கோவில் கோமதியம்மன் காமதேனு வாகனத்தில் திருவீதியுலா. திருவாடானை சிநேகவல்லியம்மன் தபசுக் காட்சி. மதுரை மீனாட்சியம்மன் வெள்ளி யானை வாகன பவனி. | | | மேஷம் - சுகம் |
| | | | ரிஷபம் - நிறைவு |
| | | | மிதுனம் - வரவு |
| | | | கடகம் - செலவு |
| | | | சிம்மம் - நட்பு |
| | | | கன்னி - நலம் |
| | | | துலாம் - எதிர்ப்பு |
| | | | விருச்சி - அலைச்சல் |
| | | | தனுசு - ஆர்வம் |
| | | | மகரம் - துயரம் |
| | | | கும்பம் - சலனம் |
| | | | மீனம் - முயற்சி |

| | நல்லநேரம் | கௌ.ந.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 7.45-8.45 | 10.45-11.45 | 04.30 | 03.00 | 12.00 |
| மாலை | 3.15-4.15 | 1.30-2.30 | 06.00 | 04.30 | 01.30 |

சூலம் : மேற்கு; பரிகாரம் : வெல்லம்; கடக லக்னம் இருப்பு நா. 4 வி. 28; சந்திராஷ்டமம் சதயம் பூரட்டாதி; கரணம் : 10.30-12; சூரிய உதயம் : 6.01

தனிமரம் தோப்பு ஆகாது

## சிந்திப்போம்.... செயல்படுவோம்

தீக்குச்சி தீப்பெட்டியிடம் கேட்டது, நீயும் நானும் ஒவ்வொரு முறை உரசும்போதும் நானே பற்றி எரிகிறேன், நீ எரிவதில்லையே ஏன்?

தீப்பெட்டி சொன்னது...தலைக்கனம் உள்ளவர்கள் விரைவில் அழிந்துபோவார்கள்






# புளியங்குடியில் இல்லம் தோறும் திமுக உறுப்பினர் விண்ணப்பம் விநியோகம்



தென்காசி, ஜூலை. 23-
தென்காசி மாவட்டம் புளியங்குடியில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா உத்தரவின் பேரில் இல்லம் தோறும் திமுக இளைஞரணி அணி உறுப்பினர் பதிவு விண்ணப்பம் விநியோகம் நிகழ்ச்சியில் புளியங்குடி நகர அலுவலகத்தில் நகர இளைஞரணி சார்பில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு புளியங்குடி திமுக அவை தலைவர் எஸ். வேலுச்சாமி பாண்டியன் மற்றும் புளியங்குடி நகர கழகச் செயலாளர் எ.அந்தோணிசாமி தலைமை விகித்தனர். இதில் நகர இளைஞரணி அமைப்பாளர் சக்தி ஐய்யப்பன் அவர்கள் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினர். இந்நிகழ்விற்கு நகரக் கழக நிர்வாகிகள், வார்டு செயலாளர்கள், வார்டு கவுன்சிலர்கள் ,என கழக நிர்வாகிகள் அனைவர்களுக்கும் நகர செயலாளர் அவர்கள் விண்ணப்ப படிவத்தை வழங்கி புதிய இளைஞர் அணி உறுப்பினர்கள் சேர்க்கும் பணியினை துவக்கி வைத்தனர். இதில் கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள் நகரத் துணைச் செயலாளர்கள், மூத்த நிர்வாகிகள் வார்டு கவுன்சிலர்கள், கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# ரூ.1,000 பெற முடியாத குடும்பத் தலைவிகளின் கோபமானது மக்களவைத் தேர்தலில் எதிரொலிக்கும் ஜெயக்குமார்



சென்னை , ஜூலை. 23-
"2 கோடியே 15 லட்சம் குடும்ப அட்டைதாரர்களில், தகுதியிருந்தும் உரிமைத் தொகைப் பெற முடியாத குடும்பத் தலைவிகளின் கோபம், வரும் நாடாளுமன்றத் தேர்தலில் எதிரொலிக்கும்" என்று அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கூறியுள்ளார்.

சென்னை ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகத்தில், அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் செய்தியாளர்களைச் சந்தித்தார். ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை தொடர்பான கேள்விக்கு பதிலளித்த அவர் கூறியது: "குடும்ப அட்டை வைத்திருப்போர் அனைவருக்கும் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் என்று முதல்வர் வாக்குறுதி அளித்திருந்தார். 2 கோடியே 15 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கும் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகையை ஏன் வழங்கவில்லை என்பதுதான் எங்களுடைய கேள்வியே.

அதேபோல், இந்த தொகையைப் பெற விண்ணப்பிக்க டோக்கன் வழங்கும் நடைமுறை பின்பற்றப்படுகிறது. அந்த டோக்கனை விநியோகிப்பவர்கள் யார் என்று பார்த்தால், தன்னார்வலர்கள். அந்த தன்னார்வலர்கள் யாருடைய பேச்சைக் கேட்பார்கள். திமுக மாவட்டச் செயலாளர்கள், ஒன்றிய செயலாளர்கள், நகர செயலாளர்கள், பேரூர் கழக செயலாளர்கள், சென்னையாக இருந்தால் வட்ட செயலாளர்கள் பேச்சைத்தான் கேட்பார்கள்.

அதேபோல், இந்த தொகையைப் பெறுவதற்கு தகுதி என்று பார்த்தால், ஆயிரம் ரூபாயை பெறுவதற்கு 1008 கண்டிஷன். முழுக்க முழுக்க இந்த ஆயிரம் ரூபாய் என்பது, அவர்கள் நிர்ணயிக்கின்ற தகுதியுடைய குடும்பங்கள் என்றால், திமுக உறுப்பினர் அட்டை வைத்திருப்பவர்களும், மாவட்டச் செயலாளர்கள் அடையாளம் காட்டும் நபர்களுக்கும்தான் இந்த உரிமைத் தொகை கொடுக்கப்படும். 2 கோடியே 15 லட்சம் குடும்ப அட்டைதாரர்களில், தகுதியிருந்தும் உரிமைத் தொகைப் பெற முடியாத குடும்பத் தலைவிகளின் கோபம் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் எதிரொலிக்கும்" என்று அவர் கூறினார்.

## மத்திய, மாநில அரசுகள்

# தமிழக விவசாயிகளின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் ஜி.கே.வாசன் வலியுறுத்தல்



சென்னை , ஜூலை. 23-
த.மா.கா. தலைவர் ஜி.கே. வாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:- தமிழக அரசு, தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தின் கோரிக்கைகளை கவனத்தில் கொண்டு காலத்தே நிறைவேற்ற வேண்டும்.

குறிப்பாக தேங்காய், கடலை, நல்லெண்ணெய் உள்ளிட்ட எண்ணெய் வகைகளை உழவர்களிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்யவும், நெல் குவிண்டாலுக்கு ரூ. 3,000, கரும்பு டன்னுக்கு ரூ.5,000 நிர்ணயம் செய்யவும், 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தை வேளாண் பணிகளுக்கு பயன்படுத்தவும், உழவர்களின் நில உரிமையை உறுதி செய்யவும், வனவிலங்குகளால் ஏற்படும் சேதங்களுக்கு சந்தை மதிப்பில் இழப்பீடு வழங்கவும், அனைத்து உழவர்களுக்கும் தங்கு தடையின்றி மும்முனை மின்சாரம் வழங்கவும், ஆனைமலை ஆறு நல்லாறு திட்டத்தை விரைந்து செயல்படுத்தவும், அப்பர் அமராவதி அணை திட்டத்தை செயல்படுத்தவும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் தமிழக அரசுக்கு முன்வைத்து, நிறைவேற்றக்கோரி மாநிலம் முழுவதும் பல்வேறு மாவட்டப் பகுதிகளில் காத்திருப்பு போராட்டங்களை கடந்த 17 நாட்களாக நடத்தி வருகிறது.

எனவே தமிழக விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் காப்பாற்ற வேண்டுமென்றால் விவசாயிகளின் கோரிக்கைகளை மத்திய மாநில அரசுகள் காலத்தே நிறைவேற்றி விவசாயத்தை மேம்படுத்த துணை நிற்க வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.









▶ தென்காசி மாவட்டம் கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட திரிகூடபுரம் பாத்திமா நகரில் ஒன்றிய கவுன்சிலர் எஸ். அருணாசல பாண்டியன் நிதியிலிருந்து ரூபாய் 11- லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைப்பதற்கான பூமி பூஜை கடையநல்லூர் ஒன்றிய குழுத் தலைவர் பி. சுப்பம்மாள் பால்ராஜ், திமுக ஒன்றிய செயலாளர் சுரேஷ் ஆகியோர் கலந்து கொண்டு தொடங்கி வைத்தனர். இந்நிகழ்ச்சியில் கிளைச் செயலாளர் எஸ். சுப்பிரமணியம் ஒன்றிய பிரதிநிதி தங்கபாண்டி, காசி விஸ்வநாதன், அப்துல், நாகூர் மீரான், பெரியசாமி, ரவி, சாஸ்தா பாண்டியன், சந்திரன், மாணிக்கராஜ், லட்சுமணன், ஹனிபா, மாரித்துரை, வெங்கடேஷ், மைதீன் ஒலி 6-வது வார்டு உறுப்பினர், ஜலில், ராஜ், விஜயகுமார், கார்த்திக், குணா, மருதுபாண்டி ஆகியோர் பூமி பூஜையில் கலந்து கொண்டனர்



▶ மதுரை திருப்பரங்குன்றம் பகுதியில் உள்ள ஆரியபட்டி மல்லிகை திருமண மண்டபத்தில் ஸ்ரீமான் எஸ்.ஆர்.வி மக்கள் நல மன்றம் சார்பில் 17வது ஆண்டு நோட்டு புத்தகம் வழங்கும் விழா நடைபெற்றது. மக்கள் நல மன்றத் தலைவர் ஜி.அயல்ராஜ் தலைமை தாங்கினார், முன்னிலை சக்திவேல் வேட்டையர் வள்ளியப்பன் வரவேற்புரை அண்ணாமலை சிறப்பு விருந்தினர் ஆன்மீக செம்மல் சண்முகசுந்தரம் கல்லூரி மாணவ,மாணவிகளுக்கு இலவச நோட்டு புத்தகத்தை வழங்கினார். உடன் 95 ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் இந்திரா காந்தி 96 வது வார்டு மாமன்ற உறுப்பினர் விஜயா மற்றும் தங்கராஜ் கணேசன் மன்ற செயற்குழு உறுப்பினர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# மணிப்பூர் கலவரத்தை தடுக்க கோரி மதுரை அருகே மலை மீது ஆர்ப்பாட்டம்



மதுரை , ஜூலை. 23-
மணிப்பூர் கலவர சம்பவத்தை கண்டித்து மதுரை அருகே யானைமலையின் மீது ஏறி பாத்திரம் உற்பத்தியாளர்கள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

மணிப்பூர் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள கலவரத்தை தடுத்து நிறுத்த வலியுறுத்தியும், மத்திய அரசை கண்டித்தும் ஒத்தக்கடை எவர்சில்வர் பாத்திரங்கள் உற்பத்தியாளர்கள் சங்கத்தினர் யானைமலை அடிவார பகுதியில் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

சங்கத் தலைவர் வீர அலி தலைமையில் 200-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். மக்கள் அதிகாரம் அமைப்பு ஒருங்கிணைப்பாளர் சரவணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மணிப்பூரில் பெண்கள் மீதான பாலியல் வன்முறை குறித்து உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியின் தலைமையில் விசாரணை நடத்த வேண்டும். வன்முறையில் ஈடுபட்டவர்களை கைது செய்ய வேண்டும். மணிப்பூர் சம்பவத்தைக் கண்டித்து தமிழ்நாடு சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தி கோஷமிட்டனர்.

பின்னர் 100 பேர் திடீரென மலையின் உச்சிக்குச் சென்றனர். அவர்களிடம் ஒத்தக்கடை போலீஸார் பேச்சுவார்த்தை நடத்தி, கீழே அழைத்து வந்தனர்.இதனால் அங்கு பரபரப்பு நிலவியது.

# இந்தியாவின் ஏற்றுமதி தடை எதிரொலி அமெரிக்காவில் அரிசி தட்டுப்பாடு அபாயம்



வாஷிங்டன் , ஜூலை. 23-
பாஸ்மதி அல்லாத அரிசி ஏற்றுமதிக்கு இந்தியா தடை விதித்துள்ளது. இந்த அறிவிப்பு வெளியான நிலையில், அமெரிக்காவில் சூப்பர் மார்க்கெட் உள்ளிட்ட கடைகளில் அரிசிப் பைகளை வாங்க மக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். ஒவ்வொரு நபரும் தங்களுக்கு அனுமதிக்கப்பட்ட உச்சபட்ச அளவில் அரிசியை வாங்கி வைத்துக் கொள்ள முனைப்பு காட்டுவதாகத் தெரிகிறது. இது தொடர்பான வீடியோக்கள் சமூக வலைதளங்களில் வெளியாகி வைரலாகி வருகின்றது.

உலகம் முழுவதும் பரவலாக அரிசி சார்ந்த உணவுகள் உண்ணப்படுகிறது. ஆனால், எல்லாப் பகுதிகளிலும் அரிசி விளைவதில்லை. பல நாடுகள் முற்றிலும் இறக்குமதி அரிசியை நம்பியே இருக்கின்றன. உலகின் மிகப் பெரிய அரிசி ஏற்றுமதி செய்யும் நாடாக இந்தியா இருக்கிறது. இந்நிலையில், கரோனா பெருந்தொற்று, உக்ரைன் போர், எல் நினோ காலநிலை தாக்கம் போன்றவற்றால் அரிசி உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அதனால், பாஸ்மதி அல்லாத பிற அரிசி ஏற்றுமதியை நிறுத்தப்போவதாக மத்திய நுகர்வோர் விவகாரங்கள் மற்றும் உணவுத் துறை அமைச்சகம் அறிவித்தது. இதன்மூலம் உள்நாட்டுச் சந்தையில் தேவைக்கு ஏற்ற இருப்பை உறுதி செய்ய முடியும் என்றும், உள்நாட்டில் அரிசி விலை ஏறாமல் தவிர்க்க முடியும் என்றும் அரசு தெரிவித்தது.

உலகளவில் ஏற்றுமதி செய்யப்படும் அரிசியில் 40 சதவீதம் இந்தியாவில் இருந்தே ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்நிலையில், இந்தியாவின் அறிவிப்பு உலகளவில் உணவு பாதுகாப்பின்மை ஆபத்தை அதிகரிக்கும் சூழல் உறுவாகியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவின் உத்தரவால் துருக்கி, சிரியா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் வெகுவாக பாதிக்கப்படும் எனக் கூறப்படுகிறது. இந்த நாடுகளில் ஏற்கெனவே உணவுப் பணவீக்கம் அதிகமாக இருக்கும் சூழலில், இந்தியாவின் அரிசி ஏற்றுமதி தடை உத்தரவு மிகப் பெரிய அளவில் தாக்கத்தை அதிகரிக்கும். கடந்த ஆண்டு இந்தியா பாஸ்மதி அல்லாத அரிசியை 10.3 மில்லியன் டன் அளவுக்கு ஏற்றுமதி செய்ததாக ஏற்றுமதி ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது. தாய்லாந்து, வியட்நாம், பாகிஸ்தான், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் இந்திய அரிசி ஏற்றுமதி நிறுத்தத்தால் பெரிதும் பாதிக்கப்படும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே மாஸ்கோ கருங்கடல் தானிய ஒப்பந்தத்தை ரத்து செய்துள்ளதால் உலக நாடுகள் கோதுமை விலை ஏற்றத்தால் சிக்கியுள்ளது. இந்நிலையில், இந்தியாவின் பாஸ்மதி அல்லாத அரிசி ஏற்றுமதி தடையும் உணவுப் பாதுகாப்பின்மைக்கு வித்திடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே கோதுமை, சர்க்கரை ஏற்றுமதிக்கு கடந்த ஆண்டு இந்தியா தடை விதித்தது குறிப்பிடத்தக்கது.

## காவிரி - வைகை - குண்டாறு இணைப்பு திட்டத்தை

# விரைவுபடுத்த வேண்டியது காலத்தின் கட்டாயம் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் கூட்டமைப்பு செயலாளர் நல்லசாமி பேட்டி



புதுக்கோட்டை , ஜூலை. 23-
காவிரி - வைகை - குண்டாறு இணைப்பு திட்டத்தை விரைவுபடுத்த வேண்டியது காலத்தின் கட்டாயம் என தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் கூட்டமைப்பு செயலாளரும் தமிழ்நாடு கள் இயக்கம் கள ஒருங்கிணைப்பாளருமான நல்லசாமி புதுக்கோட்டையில் செய்தியாளர்களை சந்திக்கையில் தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில்:-

காவிரி - வைகை - குண்டாறு இணைப்புத் திட்டத்திற்கு எடப்பாடி பழனிசாமி அடிக்கல் நாட்டினார். திட்ட மதிப்பீடு 14,400 கோடி ஆகும். இதன் மூலம் 15 நதிகள் இணைக்கப்படுகின்றன. ஏராளமான ஏரி, குளம், குட்டை, கண்மாய்களுக்கு நீர் கொடுக்க முடியும். 3 கட்டமாக இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். கரூர், திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர், தூத்துக்குடி ஆகிய மாவட்டங்கள் இந்தத் திட்டத்தால் பலன் அடையும். இவை போக டெல்டா மாவட்டங்களுக்கும் நீர் கிடைக்கும்.

கரூர் மாவட்டம், மாயனூரில் காவிரியின் குறுக்கே இந்தத் திட்டத்திற்காக 254 கோடி செலவில் கதவணைக் கட்டப்பட்டது. ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது 2014ல் இது திறந்து வைக்கப்பட்டது. கடந்த 4 ஆண்டுகளாக மேட்டூர் அணை நிரம்பி உபரிநீர் தொடர்ந்து கடலில் வீணாக வடிந்திருக்கின்றது. இந்த இணைப்பு கால்வாய் மூலம் விநாடிக்கு 6,300 கனஅடி வீதம் தண்ணீரை தெற்கு நோக்கி கொண்டு செல்ல முடியும். எடப்பாடி பழனிசாமி முதலமைச்சராக இருந்த போது கால்வாய் வெட்டுவதற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டு திட்டப்பணி துரிதமாக நடைபெற்று வந்தது. 2021ல் தமிழ்நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்திற்குப்பிறகு இந்தத்திட்டம் கிடப்பில் போடப்பட்டிருக்கிறது. திட்டமிட்டபடி வேலை நடந்திருந்தால் இந்நேரம் பணிகள் முடிந்திருக்கும்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு இந்தப் பணியைத் துரிதப்படுத்திட வேண்டும். இல்லாமல் போனால் இந்த 7 மாவட்ட மக்களுடைய எதிர்ப்பை வரும் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். என்றவர். இந்திய சமையில் எண்ணைய் தேவையில் 70 சதவிகிதம் அளவிற்கு தொடர்ந்து வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றது. இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.1 இலட்சம் கோடி அளவிற்கு அந்நிய செலாவணி இழப்பு ஏற்பட்டு விடுகிறது. இது ஒரு விவசாய விரோதப் போக்கே ஆகும். சமையல் எண்ணெய் விலையைக் குறைப்பதற்காக, அவற்றின் மீதான இறக்குமதி வரியை மத்திய அரசு ரத்து செய்துள்ளது.

இந்தியாவில் விளைவிக்கப்பட்டு வரும் சமையல் எண்ணைய்க்கு அரசுகள் எந்தவொரு மான்யமும் கொடுப்பதில்லை. மாறாக இறக்குமதி எண்ணைய்க்கு மட்டுமே மான்யம் தாராளமாகத் தரப்பட்டு வருகிறது. இந்த எண்ணையைத் தான் ரேஷன் கடைகளில் அரசே முன்னின்று மக்களுக்கு விநியோகித்தும் வருகின்றது. இவ்வாறான போக்கு ஒரு காலனி ஆதிக்கத்தின் வெளிப்பாடு. கிழக்கிந்திய கம்பெனி ஆட்சிக்கும் கடந்த 74 ஆண்டுகால ஆட்சிக்கும் வேறுபாடு இருப்பதாகத் தெரியவில்லை.

விவசாயிகள் செம்மறி ஆடுகளாக இருக்கின்ற வரை ஆட்சியாளர்கள் தொடர்ந்து ஓநாய்களாகவே இருப்பர் என்பதற்கு இந்த இறக்குமதிக் கொள்கையே ஏற்ற எடுத்துக்காட்டு. இது மாறாத வரை இந்தியா வளர்ச்சிப் பாதையில் அடியெடுத்து வைக்க முடியாது. வல்லரசாவது என்பது கனவிலும் நடக்காது. என்றதுடன்.

திட்டமிட்டு செயல்படும் வளர்ந்த நாடுகளில் உணவுப் பொருட்களினுடைய விலை கடும் வீழ்ச்சியையும், உயர்வையும் சந்திப்பது இல்லை. உள்நாட்டுத் தேவை, ஏற்றுமதி இவற்றைக் கணக்கில் கொண்டு பருவத்திற்கேற்ப சாகுபடி பரப்பளவை அரசு நிர்ணயம் செய்து அறிவிக்கின்றார்கள். விவசாயிகள் அனுமதி பெற்று பயிரிடுகின்றார்கள். இலக்கு எட்டியதற்குப் பிறகு மாற்றுப்பயிருக்கு மாறிக் கொள்கிறார்கள். இடையில் பயிரை பார்வையிடுகின்றார்கள். உபரியாக விளையும் என்றால் எந்தெந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது, எவ்வாறு மதிப்புக்கூட்டப்பட்டப் பண்டங்களாக மாற்றி இருப்பு வைப்பது என்ற கணிப்பிற்கு வந்து விடுகின்றார். அதனால் தான் அந்த நாடுகளில் சராசரியாக 1 கிலோ தக்காளி விலை ரூ.25. என்றால் ரூ. 30 வரை விலை ஏற்றம் காண்கின்றது. இறங்குகின்ற பொழுது ரூ.20க்குங்கீழே விலை வீழ்ச்சியடைவதில்லை. இதனால் விளைவிப்போர் மற்றும் நுகர்வோர் நலன் காக்கப்படுகிறது.

இப்படிப்பட்ட நிலை இந்தியாவில் இல்லவே இல்லை. தக்காளி, வெங்காய விலை உயர்ந்தால் விவசாயிகள் பெருமளவில் இவற்றை விளைவிப்பார்கள். விலை குறைந்து போனால் சாகுபடி பரப்பளவைக் குறைத்துக் கொள்வார்கள். திட்டமிடல் என்பது அரசிடமும் இல்லை. விளைவிக்கும் விவசாயிகளிடமும் இல்லை. இதனால் தான் 1 கிலோ தக்காளி சில நேரங்களில் ரூ.100ஐத் தாண்டி விடுகின்றது. ஒரு சில வேளைகளில் கிலோ 1 ரூபாய்க்கு வாங்குவதற்குக் கூட வாங்குவதற்கு ஆளில்லாமல் போகின்றது. அப்போது சாலை ஓரங்களில் கொட்டிக்கிடப்பதை ஆங்காங்கே பார்க்கவும் முடிகின்றது. இதனால் விளைவிப்போர்களும், நுகர்வோர்களும் பெருமளவில் பாதிப்பிற்கு ஆளாக்கப்படுகின்றார்கள். இடைத் தரகர்கள் ஆதாயம் பெறுகின்றார்கள்.

ஆட்சியைப் பிடிப்பதற்கும், பிடித்த ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்வதற்கும், தேவையற்ற இலவசங்களைத் தேர்தல் நேரத்தில் முன்னிறுத்தி, பின்பு நடைமுறைப்படுத்துவது நாடெங்கிலும் பரவி விட்டது. நலத்திட்டங்கள் என்ற பெயரில் கையேந்தும் குடிமக்களைத் தேர்வு செய்வதிலேயே அரசுப்பணியாளர்கள் பயன்படுத்தப் படுகின்றார்கள். பயிர் பார்வைப்பற்றிய புள்ளி விபரம் இதனால் பின்னுக்குத் தள்ளப்படுகிறது. இரட்டை மாட்டு வண்டியை ஓட்டுவோரிடம் எருதுகளின் தலைக்கயிறு இருந்தால் தான் வண்டியை குடை சாயாமல் ஓட்டி செல்ல முடியும். ஆனால் இந்தியாவில் தலைக்கயிற்றைக் கையில் பிடிக்காமலேயே நாட்டை வழி நடத்தும் ஆட்சியாளர்களைப் பார்க்க முடிகிறது. இந்த நிலை மாறினால் மட்டுமே வளம் சேரும் காலப்போக்கில் நாடு வல்லரசாக மாறும் என்றார்.

# டி.ஜே.எஸ்.கலை மற்றும் அறிவியல் கல்லூரியை வெ.இறையன்பு துவக்கி வைத்தார்




ஊத்துக்கோட்டை, ஜூலை23–

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஒன்றியம், கவரப்பேட்டை அருகே பெருவாயல் ஊராட்சியில் டி.ஜே. எஸ் நகரில் டி.ஜே.எஸ் கல்விக்குழுமத்தின் ஐந்தாவது கல்வி நிறுவனமாக டி.ஜே.எஸ். கலை மற்றும் அறிவியல் கல்லூரிதுவக்கப்பட்டது. இக்கல்லூரியின் துவக்க விழாநிகழ்ச்சிநேற்றுகாலை கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு,டி.ஜே.எஸ் கல்வி குழுமத்தின் தலைவரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜே.கோவிந்தராஜன் தலைமை தாங்கினார். டி.ஜே.எஸ் கல்வி குழுமத்தின் நிர்வாக இயக்குனரும், செயலாளருமான டி.ஜே. ஆறுமுகம், துணைத் தலைவர் டி.ஜே. தேசமுத்து, இயக்குனர் ஏ.கபிலன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வைஷ்ணவா கல்லூரியின் முதல்வர் சந்தோஷ் பாபு, சென்னை மாநிலக் கல்லூரியின் தமிழ்த்துறை பேராசிரியர் ரகுபதி ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்து பேசினர்.

சிறப்பு விருந்தினரை அறிமுகப்படுத்தி தமிழ் துறை பேராசிரியர் கு.விஜயன் பேசினார். இதில், சிறப்பு விருந்தினராக தமிழக அரசின் முன்னாள் தலைமை செயலாளர் வெ.இறையன்பு கலந்து கொண்டு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை குத்து விளக்கேற்றி துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றி பேசினார்.

இதன் பின்னர், மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்களின் கேள்விகளுக்கு முன்னாள் தலைமை செயலாளர் வெ.இறையன்பு பதில் அளித்து பேசினார். இதன் பின்னர், அவர் 33 மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகையாக ரூ.2 லட்சத்து 52 ஆயிரத்து 750–ம், ஒரு மாணவனுக்கு மூன்று வருடத்திற்கான கல்வி உதவித் தொகை ரூ.ஒரு லட்சத்து 40 ஆயிரம் உள்ளிட்ட உதவி தொகைகளை வழங்கினார். இதன் பின்னர், மாணவர்களின் கண்கவர் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிகளில், இயக்குனர்கள் டாக்டர் பழனி, டி. தினேஷ், ஏ. விஜயகுமார், டி.ஜே. எஸ்.ஜி.தமிழரசன், உறுப்பினர்கள் எஸ். சண்முகசுந்தரம், ஆர். ஜெயக்குமார், ஏ. ராஜேஷ், நிர்வாக அதிகாரி எஸ்.ஏழுமலை மற்றும் கல்லூரி முதல்வர்கள், இருபால் ஆசிரியர்கள், கட்சியின் முக்கிய பிரமுகர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக அனைவரையும் கல்லூரியின் முதல்வர் டாக்டர் வி.லக்ஷ்மிபதி வரவேற்றார். முடிவில், தமிழ்துறை தலைவர் மகாலட்சுமி நன்றி கூறினார்.



▶ தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் நகராட்சியில் தூய்மைப் பணிகளுக்காக 15 வது நிதிக் குழு மானியம் மூலம் 20 பேட்டரி வாகனங்கள் சுமார் 40 லட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும் நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சிக்கு நகராட்சி சேர்மன் உமா மகேஸ்வரி சரவணன் தலைமை வகித்தார், நகராட்சி கமிஷனர் சபாநாயகம் சுகாதார அலுவலர் பாலச்சந்தர் முன்னிலை வகித்தனர் இதில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏ கலந்துகொண்டு புதிய பேட்டரி வாகனங்களை நகராட்சி பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார். இதில் மாவட்ட பொருளாளர் சரவணன்,மேலநீலதநல்லூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் பெரியதுரை,நகரச் செயலாளர் பிரகாஷ் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சரவணன், சிவகிரி சேது சுப்பிரமணியன், சுகாதார ஆய்வாளர்கள் வெங்கட்ராமன், மாரிசாமி மாரிமுத்து, திமுகவைச் சேர்ந்த வக்கீல் சதீஷ், வீரமணி, தாஸ், ஜெயக்குமார், பிரகாஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## புதுக்கோட்டை புத்தகத் திருவிழா

# கல்லூரி மாணவர்களுக்கான கலை, இலக்கியப் போட்டிகள்



புதுக்கோட்டை, ஜூலை.23–

6 – ஆவது புதுக்கோட்டை புத்தகத் திருவிழாவை முன்னிட்டு மாவட்ட அளவில் கல்லூரிகளுக்கான கலை, இலக்கியப் போட்டிகள் நேற்று புதுக்கோட்டை அரசு மன்னர் கல்லூரியில் நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகமும், தமிழ்நாடு அறிவியல் இயக்கமும் இணைந்து 6–ஆவது புதுக்கோட்டை புத்தகத்திருவிழா புதுக்கோட்டை நகர் மன்றத்தில் வருகின்ற ஜூலை 28 முதல் ஆகஸ்ட் 6 வரை நடத்துகிறது. இவ்விழாவையொட்டி மாவட்ட அளவில் கல்லூரி மாணவர்களுக்கான கலை, இலக்கியப் போட்டிகள் புதுக்கோட்டை அரசு மன்னர் கல்லூரியில் நேற்று நடைபெற்றது. போட்டிகளுக்கான தொடக்க நிகழ்ச்சிக்கு புத்தகத் திருவிழா ஒருங்கிணைப்பாளர் கவிஞர் தங்கம்மூர்த்தி தலைமை வகித்தார். ஒருங்கிணைப்பாளர்கள் அ.மணவாளன், எஸ். டி.பாலகிருஷ்ணன், ம.வீரமுத்து, மு.முத்துகுமார், ஜீவி முன்னிலை வகித்தனர், போட்டிகளை பேராசிரியர்கள் விஸ்வநாதன், முத்தமிழ், உஷாநந்தினி ஆகியோர் ஒருங்கிணைத்தனர், மன்னர் கல்லூரி தேர்வு நெறியாளர் கணேசன், பேராசிரியர் பிச்சைமுத்து ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

பேச்சுப்போட்டியில் முதல் பரிசை கற்பக விநாயகா செவிலியர் கல்லூரி மாணவி ச.ஜமுனா, இரண்டு மற்றும் மூன்றாம் பரிசுகளை கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலைக்கல்லூரி மாணவிகள் முறையே வி.ஜெயலெட்சுமி, சா.சஸ்ரீனா பிர்தவுஸ், ஆறுதல் பரிசுகளை ஜெ.ஜெ. கல்வியியல் கல்லூரி மாணவி செ.ஜோதி, மதர்தெரசா மருந்தியல் கல்லூரி மாணவி வாணிஸ்ரீ ஆகியோர் பெற்றனர். கவிதை மற்றும் குறும்படப் போட்கள் நடுவர் குழுவினருக்கு அனுப்பப்பட்டுள்ளது. முடிவுகள் பின்னர் அறிவிக்கப்படும்என் போட்டி ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகளும், சான்றிதழ்களும் புத்தகத் திருவிழா மேடையில் மாவட்ட ஆட்சியரால் வழங்கப்படும் என புத்தகத் திருவிழா ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.



▶ சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டத்திற்குட்பட்ட கண்மாய்களில் நீர்வளத்துறையின் சார்பில் பழுதுபார்த்தல், புனரமைத்தல் மற்றும் மறுசீரமைத்தல் திட்டத்தின் உசிலங்குளம் கண்மாய் பகுதியில் நடைபெற்று வரும் பணிகள் தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், நேரில் ஆய்வு மேற்கொண்டார். உடன் சருகனியாறு வடிநில கோட்ட செயற்பொறியாளர் அ.வெ. பாரதிதாசன் உட்பட பலர் உள்ளனர்.

# பொறையார் செயின் ஜார்ஜ் புனித சந்தியாகப்பர் ஆலய தேர்பவனி மற்றும் கொடியேற்று விழா



தரங்கம்பாடி, ஜூலை– 23:

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுக்கா பொறையார் ராஜம்பாள் தெருவில் உள்ள செயின்ட் ஜார்ஜ் புனித சந்தியாகப்பர் ஆலயத்தில் 23 ஆம் ஆண்டு தேர்பவனி மற்றும் கொடியேற்று விழா நடைபெற்றது. முன்னதாக, அலங்கார குதிரைகள், நடனக்குதிரைகள், ஒட்டகம், செண்டைமேளம் முழங்க ஆலயத்திலிருந்து ஆயிரக்கணக்கான பெண்கள் சந்தனகுடம், பல்வேறு வகையான சீர்வரிசை, தென்னங்கன்றுகள், முளைப்பாரி எடுத்தும் சாமியை பல்லக்கில் ஊர்வலமாக பெண்கள் தோளில் தூக்கிக் கொண்டும் கொடி ஊர்வலம் நடைபெற்றது.

அதனை தொடர்ந்து மிக்கல் ஆண்டவர், தேவமாதா குழந்தை ஏசு செயின்ட் ஜார்ஜ் புனித சந்தியாகப்பர் ஆகிய சுருவங்கள் தனித்தனியாக அலங்கரிக்கப்பட்ட ரதத்தில் வைக்கப்பட்டு பல்வேறு வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டு விமர்சையாக ஊர்வலம் புறப்பட்டது. ராஜம்பாள் தெரு, மெய்தீன் மரைக்காயர் தெரு, வேப்பமரத்தெரு, காளியம்மன் கோவில் தெரு, பார்வதி அம்மன் கோவில் தெரு வழியாக ஊர்வலம் சென்று ஆலயத்தை அடைந்தது. பின் ஆலயத்தில் உள்ள கொடிமரத்தில் கோடி ஏற்கப்பட்டது இதில் தமிழ்நாடு புதுச்சேரி உள்ளிட்ட மாநிலங்களிலிருந்து ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்துக்கொண்டனர். விழாவில் சும்பாவிதம் ஏற்படாத வண்ணம் பாதுகாப்பு பணியில் பொறையார் காவல்துறையினர் ஈடுபட்டிருந்தன

## சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து

# 14 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட அங்கன்வாடி கட்டிடத்தைத் திறந்து வைத்த காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர்



காஞ்சிபுரம், ஜூலை,23

காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட 28வது வார்டில் அங்கன்வாடி கட்டிடம் கட்டித்தர கோரி சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசனிடம் பொதுமக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

பொதுமக்கள் கோரிக்கை ஏற்று சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய்.14.12 லட்சம் மதிப்பில் புதிய அங்கன்வாடி கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து 28வது வார்டில் உள்ள வேகவதி ரோட்டில் புதிதாக கட்டி முடிக்கப்பட்ட அங்கன்வாடி கட்டிடத்தை காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன் திறந்து வைத்து குத்துவிளக்கேற்றி மக்கள் பயன்பாட்டிற்கு அர்பணித்தனர்.

பின்னர், பொதுமக்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்களுக்கு இனிப்புகளையும் வழங்கினர். இந்நிகழ்வில் மேயர் மகாலட்சுமி யுவராஜ், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## சீர்காழி அருகே சிறுவன் உள்ளிட்ட

# 8 பேரை கடித்து குதறிய வெறி நாய், படுகாயத்துடன் மருத்துவமனையில் சிகிச்சை





சீர்காழி, ஜூலை,23

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே தர்மதானபுரம் ஊராட்சிக்குட்பட்ட மேல ஆத்துகுடி, கீழ ஆத்துக்குடி கிராமத்தில் 100 க்கும் மேற்பட்ட விவசாய கூலி தொழிலாளர்கள் குடும்பத்துடன் வசித்து வருகின்றனர்.

அப்பகுதியில் தெருநாய்ஒன்றுகடந்தஒரு வாரமாக வெறிகொண்டு பொதுமக்கள் மற்றும் ஆடுகளை கடித்துக் குதறி வருகிறது. இந்த நிலையில் நேற்று மேல ஆத்துகுடி கிராமத்தை சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி, பாஸ்கர், சிம்சன் மற்றும் ஒரு சிறுமி உட்பட 8 பேரை தெருநாய் கடித்துக் குதறியது.

இவர்கள் அனைவரும் சீர்காழி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதேபோல வீடுகளில் கட்டி வைக்கப்பட்ட ஆடுகள் மற்றும் மேய்ச்சலுக்கு சென்ற ஆடுகளையும் அந்த வெறிநாய் கடித்து குதறி படுகாயத்தை ஏற்படுத்தியுள்ளது.


ஊராட்சி நிர்வாகத்திடம் புகார் தெரிவித்தும் நடவடிக்கை எடுக்காமல் அலட்சியம் படுத்துவதால் மாவட்ட நிர்வாகம் மற்றும் வனத்துறையினர் தெரு நாயை விரைந்து பிடித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# காரைக்காலில் கிடப்பில் கிடக்கும் சாலை மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்த வேண்டுமென அரசுக்கு கோரிக்கை

காரைக்கால், ஜூலை.23:

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் புதுச்சேரிக்கு அடுத்து படியாக பெரிய நிலப்பரப்பையும், அதிக மக்கள்தொகை, சட்டமன்ற உறுப்பினர்களையும் கொண்டது காரைக்கால் பிராந்தியம். காரைக்கால் நகரத்தில் பிரெஞ்சுக்காரர்களால் அமைக்கப்பட்ட சாலைகள் பெரும்பாலும் நேர்கோட்டில் அமைந்தவை என்பது காரைக்காலின் ஒருசிறப்பு. அது குறித்தான ஒரு சொலவடை, 'நீதி அழகு இல்லையென்றாலும் வீதி அழகு உண்டு' என்பதாகும். அப்போதைய மக்கள் தொகை பெருக்கத்திற்கு ஏற்றவாறு காரைக்கால் மாவட்டத்தில் உள்ள சாலைகள், கழிவு நீர் வடிகால்கள், கட்டமைப்புகள் வடிவமைக்கப்பட்டன.

2011 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி காரைக்கால் மாவட்டத்தில் 2,27,589 மக்கள் இருந்தனர் என புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றனர். ஆனால் தற்போதைய நிலைமையோ மும்மடங்கு பெருகி விட்டது. மக்கள் தொகைக்கு ஈடாக வாகன போக்குவரத்தும் வீட்டிற்கு இரண்டு பைக், ஒரு கார் என நாகரீக வளர்ச்சிக்கு



வித்திட்டுள்ளது.

ஆனால் தற்போதைய வாகன போக்குவரத்து மற்றும் நிர்வாக ரீதியாக அடுத்தகட்ட வளர்ச்சிக்கு காரைக்கால் செல்ல அரசின் பல திட்டங்கள் கிடப்பில் இருப்பதால் வளர்ச்சி தடைபடுவதாக பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து புதுச்சேரி மற்றும் காரைக்கால் அரசு ஒப்பந்ததாரர்கள் நலச்சங்கம் காரைக்கால் மாவட்ட அமைப்பாளர் டி என் சுரேஷ் கூறியிருப்பதாவது:

காரைக்கால் மாவட்ட ஆட்சியரகம் 5 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. நூற்றாண்டிற்கும் மேல் பழமை வாய்ந்த இந்த கட்டிடம் தற்போது வலுவிழந்து, பழமையாக உள்ளது. இதனால் அங்கு பணிபுரியும் மாவட்ட ஆட்சியர் மற்றும் அதிகாரிகள், ஊழியர்களுக்கு பாதுகாப்பில்லாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் மக்கள் வருகைக்கு தகுந்தமாதிரி இடவசதிகளும் இல்லை.

இந்நிலையில் புதுச்சேரி அரசு ரூ.400 கோடி மதிப்பில் புதிய சட்டசபை வளாகத்தை, தலைமை செயலகத்துடன் சேர்த்து கட்ட உள்ளது. இது வரவேற்க கூடியதுதான். அதுபோல் காரைக்கால் மாவட்டத்தில் புதியதாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை கட்ட வேண்டும். அப்போது தான் சமமான வளர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் சட்டமன்ற குளிர்கால கூட்டத்தொடரை காரைக்காலில் நடத்துவதற்கு ஏதுவான நிலையில் ஒரு சட்டசபை அரங்கும் கட்ட வேண்டும்.

மேலும் காரைக்கால் சீனியர் எஸ்.பி., மற்றும் எஸ்.பி. அலுவலகமும் புதிய மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் அமைய வேண்டும். புதிய காரைக்கால் மாவட்ட ஆட்சியர் அலுலகத்தில் காரைக்கால் பிராந்தியத்தில் உள்ள அனைத்து எம்.எல்.ஏ.க்களுக்கும் ஒரு அலுவலகமும், எம்.பி.க்கள் வந்து தங்கி மக்களை சந்திப்பதற்கு 2 அலுவலகமும் கட்ட வேண்டும். இதுபோன்ற



வாய்ப்புகளை ஏற்படுத்தினால் மட்டுமே புதுச்சேரி முதல்வர், அமைச்சர்கள், எம்.பி.க்கள் காரைக்கால் மாவட்டத்திற்கு கட்டாயம் வரும் சூழல் ஏற்பட்டு வருவார்கள்.

இதன் மூலம் காரைக்காலில் சமமான வளர்ச்சி ஏற்படும். காரைக்கால் பிராந்தியத்திற்கு பணியாற்ற வரும் பிற பிராந்திய அதிகாரிகள், ஆசிரியர்கள், ஊழியர்கள் காரைக்கால் வேண்டாம் என்று கூறி புறக்கணிக்காத சூழலும் ஏற்படும். எனவே புதுச்சேரியில் புதிய சட்டசபைக்கு பூமி பூஜை நடத்தும் நாளில், காரைக்கால் மாவட்டத்தில் புதிய மாவட்ட ஆட்சிர் அலுவலகத்திற்கும் பூமி பூஜை நடத்த வேண்டும். இந்திய புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை, அனைவரும் சுலபமாக வந்து செல்ல போக்குவரத்து வசதியுள்ள காரைக்கால் மேற்கு புற வழிச்சாலையில் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களில் பணிகளை துவக்க வேண்டும்.

அவ்வாறு அமையப்பெறும் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவக அருகிலேயே எஸ்.எஸ்.பி அலுவலகம், முகாம் அலுவலகங்கள், தீயணைப்பு நிலையம், ஆரம்ப சுகாதார நிலையம், பொழுது போக்கு பூங்காக்கள் இடம்பெறுவதால் கிடப்பில் உள்ள சாலை மேம்பாட்டு பணிகளை புதுவை அரசு செயல்படுத்த வேண்டும். மேலும் எதிர்காலத்தில் ஐ.டி நிறுவனங்களும் அமைய உள்ளதால் தொலை நோக்கு திட்டங்களை செயல்படுத்தி காரைக்கால் மாவட்ட வளர்ச்சிக்கு புதுவை அரசு முன்னுரிமை தாரா வேண்டும். இதற்கு புதுச்சேரி சட்டமன்ற மதிப்பீட்டு குழு தலைவராக உள்ள சட்டமன்ற உறுப்பினர் நாஜீம் சிறப்பு கவனம் செலுத்தி கொண்டுவர வேண்டும்.

எனவே புதுச்சேரி அரசு இந்த 10 ஆண்டுகளாக காரைக்கால் மாவட்ட வளர்ச்சிக்காக அறிவித்த திட்டங்களை போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அறிவித்த திட்டங்களுக்கு உடனடியாக நிதி ஒதுக்கீடு செய்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என புதுச்சேரி அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

# தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றத்தின் ஒன்றிய செயற்குழு கூட்டத்தில் காலை சிற்றுண்டி திட்டம்: தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்து தீர்மானம்



கந்தர்வக்கோட்டை, ஜீலை. 23–

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றத்தின் ஒன்றிய செயற்குழு கூட்டம் கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் நடைப்பெற்றது. முதல்வரால் செயல்படுத்தப்பட்டு வரும் காலை சத்துணவு திட்டத்திற்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கந்தர்வகோட்டை ஒன்றியத்தில் 14பள்ளி கட்டிடங்கள் கட்ட ஆணை பிறப்பித்த தமிழ்நாடு முதல்வருக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் ஒன்றிய தலைவர் பொறுப்பு அப்துல்ஹமீது தலைமை வகித்தார், ஒன்றிய செயலாளர் சின்னராஜா அனைவரையும் வரவேற்று கூட்டப் பொருள் பற்றி விளக்கினார், மாவட்ட பொருப்பாளர் சரவணன் சிறப்புரையாற்றினார், மாநில பொதுக்குழு உறுப்பினர் சிவா ஆசிரியர் மன்றத்தின் இளைஞர் அணி மகளிர் அணி மாநாடு குறித்து பேசினார், தொடர்ந்து கோவிந்தசாமி ஒன்றிய துணைச் செயலாளர் தமிழ்நாடு அரசின் திட்டங்கள் எடுத்து கூறினார். மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் கோவிந்தராசு ஆசிரியர் மன்றத்தின் வளர்ச்சி குறித்துபேசினார்.

பொன்கலன் விளக்க உரையாற்றினார். கூட்டத்தில் மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி தமிழரசன் மகளிர் அணியின் சார்பாக தலைமை ஆசிரியர்கள் தமிழ்ச்செல்வி, மீனாம்பாள், ஜூலி, வனிதா, ஜோதி வின்னரசி மகளிர் மாநாடு குறித்து பேசினர், நிறைவாக ஒன்றிய பொருளாளர் வெங்கடேசன் ஆசிரியர் நன்றியுரை கூறினார்.

# கல்லாக்கோட்டை ஊராட்சியில் வளர்ச்சி திட்டப் பணிகளை எம்.சின்னதுரை எம்எல்ஏ தொடங்கி வைத்தார்



கந்தர்வகோட்டை, ஜூலை.23-

புதுக்கோட்டை மாவட்டம்கந்தர்வகோட்டை தொகுதிக்குட்பட்ட கல்லாக்கோட்டை ஊராட்சியில் பல்வேறு பணிகளுக்கு சட்டப்பேரவைஉறுப்பினர் எம்.சின்னதுரை நேற்று அடிக்கல் நாட்டினார்.

கல்லாக்கோட்டை ஊராட்சி அரசு மேல்நிலைப்பள்ளியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ. 7 லட்சம் மதிப்பிலான புதிய கலையரங்கம் கட்டுவதற்கு சட்டமன்ற உறுப்பினர் எம். சின்னதுரை அடிக்கல் நாட்டினார், மேலும், முதலமைச்சர் கிராம சாலை மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து ரூ. 48 லட்சம் மதிப்பீட்டில் கல்லாக்கோட்டை பாய்காரர் தெருவிற்கு புதியசாலைஅமைக்கும் பணியையும் எம். சின்னதுரை எம்எல்ஏ தொடங்கி வைத்தார். இந்நிகழ்வுகளில் திமுக தெற்கு ஒன்றியச் செயலாளர் பரமசிவம், ஒன்றியக்குழுத் தலைவர் கார்த்தி, சிபிஎம் மாவட்டச் செயற்குழு உறுப்பினர் ஏ.ராமையன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# முதல்வர் ஸ்டாலினின் தாயார் தயாளு அம்மாளுக்கு உடல்நலக் குறைவு மருத்துவமனையில் அனுமதி



சென்னை, ஜூலை.23-

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினின் தாயார் தாயாளு அம்மாள் உடல்நலக் குறைவு காரணமாக சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினின் தாயார் தயாளு அம்மாள். உணவு ஒவ்வாமையால் ஏற்பட்ட உடல்நலக் குறைவு காரணமாக, சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள அப்பல்லோ மருத்துவமனையில் நேற்று மாலை 6.15 மணிக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்ட்டார்.

மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட தயாளு அம்மாளுக்கு அங்கு விரிவான மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. தயாளு அம்மாளுக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்ட விவரம் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு தெரிவிக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து, சென்னை ஆரியபுரத்தில் நடந்த முத்தமிழ்ப் பேரவை நிகழ்ச்சியில் கலந்துகொண்ட முதல்வர் ஸ்டாலின் அங்கிருந்து நேரடியாக, அப்பல்லோ மருத்துவமனைக்கு வருகைதந்து, தனது தாயாருக்கு வழங்கப்படும் மருத்துவ சிகிச்சை குறித்த விவரங்களைக் கேட்டறிந்தார்.




தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தலைமையில் நேற்று சென்னை மாநில செய்தி நிலையக் கூட்டரங்கில் சென்னை, திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூர் மண்டல இணை இயக்குநர்கள் மற்றும் இம்மண்டலங்களுக்குட்பட்ட மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் மரு. இரா. செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன், மற்றும் செய்தித்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டை வெங்கடேஸ்வரா மெட்ரிக் பள்ளி வாசிப்போர் மன்றம் சார்பாக டாக்டர் முத்துலெட்சுமி அம்மையார் நினைவு நாள் மலரஞ்சலி



புதுக்கோட்டை, ஜூலை.23-

புதுக்கோட்டை ஸ்ரீ வெங்கடேஸ்வராமெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் வாசிப்போர் மன்றம் சார்பாக முத்துலெட்சுமி அம்மையாரின் நினைவு நாளில் மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

புதுக்கோட்டை திருக்கோகர்ணம் பகுதியில் ஜூலை 30 1888-ல் பிறந்து இந்தியாவின் முதல் பெண் மருத்துவர் பட்டம் பெற்று, சென்னை மாகாண சட்டசபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, சென்னைமாநகராட்சியின் முதல்துணைமேயராகவும் விளங்கிஇந்தியபெண்கள் சங்கத்தின் தலைவராகவும் பதவி வகித்தவர் டாக்டர் முத்துலெட்சுமி அம்மையார்.

தேவதாசிமுறைஒழிப்பு, பெண்கள் சொத்துரிமை, இருதாரச் தடைச் சட்டம், பாலியல் விவாக தடைச் சட்டம்போன்றசட்டங்கள் நிறைவேறக் காரணமாக இருந்தவர், சென்னை அடையாரில் அனாதைக் குழந்தைகளுக்காக அவ்வை இல்லத்தைத் தொடங்கியவர் அடையாறு புற்றுநோய் மருத்துவமனை உருவாகக் காரணமாக இருந்தவர். “முதலில் மருத்துவம் படிச்சாரு முத்துலெட்சுமி அவர் பேரு” என்ற புதுக்கோட்டை நம் புகழ்க்கோட்டை என்ற புகழ்பெற்ற பாடலை எழுதிய பள்ளியின் முதல்வர் கவிஞர் தங்கம் மூர்த்தியின் வழிகாட்டுதலின் படி டாக்டர் முத்துலெட்சுமி அம்மையார் நினைவு நாளான 22.07.2023 அன்று பள்ளியின் வாசிப்போர் மன்றம் சார்பாக அவரின் திருவுருவப்படத்திற்கு மாணவர்கள்; மலரஞ்சலி செலுத்தினர். நிகழ்வில் பள்ளியின் துணை முதல்வர் குமாரவேல், மேலாளர் ராஜா, ஆசிரியர்கள் காசாவயல் கண்ணன், கணியன் செல்வராஜ், உதயகுமார் மற்றும் ஏராளமான ஆசிரியப்பெருமக்கள் கலந்துகொண்டனர்.

# மணிப்பூர் சம்பவம் பாஜகவில் இருந்து விலகினார் புதுச்சேரி முன்னாள் எம்.பி கண்ணன்



புதுச்சேரி, ஜூலை.23-

மணிப்பூர் சம்பவத்தைத் தொடர்ந்து பாஜகவுக்கும் தனக்கும் எந்த சம்பந்தமும் அறவே இல்லை என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கண்ணன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட அறிக்கை: மணிப்பூர் மாநிலத்தில் மே மாதம் நடந்தேறிய பெண்களுக்கு எதிரான மிகவும் அவமானகரமான செயல் இந்தியர்களை மட்டுமல்ல உலகமக்களின் மனசாட்சியை உலுக்கி மிகப்பெரிய கேவலமான நிலைக்கு நாம் தள்ளப்பட்டு இருக்கின்றோம். இந்த குரூரமான செயலுக்கு எந்தவிதமான சாக்கு போக்கும் சொல்லாமல் மணிப்பூர் மாநில அரசும் மத்திய அரசும் இந்த கொடூரத்துக்குப் பொறுப்பேற்றுக் கொண்டு முடிந்தவரை அதை சீர்செய்யும் நடவடிக்கையில் இறங்க வேண்டும். மணிப்பூர் முதல்வரை அந்த பதவியிலிருந்து நீக்கி ஜனாதிபதி ஆட்சியை அமல்படுத்த வேண்டும்.

மணிப்பூர் பெண்குலத்துக்கு இழைக்கப்பட்ட இந்தமாதிரியான கொடூரம் எந்த வகையான மற்ற குற்றங்களுடனும் ஒப்பிடவே கூடாது- முடியாது, ஏனென்றால் இந்த சம்பவம் பொதுமக்களுக்கு இரண்டரை மாதங்கள் கழித்துதான் தெரியவந்துள்ளது. அதுவும் அந்த சம்பவத்தின் வீடியோ வைரலான பிறகுதான் எல்லோருக்கும் தெரியவந்தது. இந்த இரண்டரை மாதம் என்பது பல விசாரணைக்கும் கேள்விகளுக்கும் பதிலளிக்க வேண்டியது ஆட்சியாளர்களின் கடமை. இந்தக் கொடுமையைக் கண்டிக்க எந்த வார்த்தையும் எனக்கு கிடைக்கவில்லை.

காட்டுமிராண்டித்தனமான, மனிதகுலத்துக்கு குறிப்பாக பெண்குலத்துக்கே இழைக்கப்பட்ட மிகப்பெரிய அநீதி, கொடூரம், குரூரம். மனசாட்ச்சியுள்ள யாரும் இதைக் கடுமையாக கண்டிக்காமல் இருக்க முடியாது.இது சம்மந்தமாக என்னுடைய கடுமையான கண்டணங்களை மத்திய பாஜக அரசுக்கும், மணிப்பூர் மாநில அரசுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிகாரபூர்வமாக இப்போது நான் அறிவிக்க விரும்புவது பாஜகவுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் தொடர்பும் அறவே இல்லை என்பதே. பொதுமக்களுக்கான எனது பணியும் போராட்டமும் என்றும் தொடரும், என்று அவர் தெரிவித்துள்ளார்.

# மணிப்பூரில் தொடரும் பாலியல் கொடுமையை எதிர்த்து புதுக்கோட்டையில் மாதர், வாலிபர், மாணவர், தீ.ஒ.மு ஆர்ப்பாட்டம்



புதுக்கோட்டை, ஜூலை.23-

மணிப்பூரில் தொடரும் பாலியல் வன்கொடுமைகளைக் கண்டித்தும், மணிப்பூர் கலவரத்தை வேடிக்கை பார்க்கும் மோடி அரசின் ஆணவப் போக்கைக் கண்டித்தும் புதுக்கோட்டையில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

புதுக்கோட்டை பேருந்து நிலையத்தில் அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம், இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம், இந்திய மாணவர் சங்கம், தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி ஆகிய அமைப்புகளின் சார்பில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாதர் சங்க மாவடடத் தலைவர் எஸ். பாண்டிச்செல்வி தலைமை வகித்தார்.

ஆர்ப்பாட்டத்தில் சிபிஎம் மாவட்டச் செயலாளர் எஸ். கவிவர்மன், நகரச் செயலாளர் ஆர். சோலையப்பன், தீண்டாமை ஒழிப்பு முன்னணி மாவட்டச் செயலாளர் சி.ஜீவானந்தம். தலைவர் டி.சலோமி, மாதர் சங்க மாவட்டச் செயலாளர் பி. சுசிலா, வாலிபர் சங்க நகரச் செயலாளர் கு. ஜெகன், மாணவர் சங்க மாவட்டச் செயலாளர் எஸ். ஜனார்த்தனன், தலைவர் அ.சந்தோஷ்குமார், தமுஎகச மாவட்டச் செயலாளர் ஸ்டாலின் சரவணன், மாற்றுத்திறனாளிகள் சங்க நகரச் செயலாளர் ரமேஷ், உள்ளிட்டோர் கண்டன உரையாற்றினர்.

# கந்தர்வகோட்டையில் மாணவர்களுக்கு கூடுதல் பேருந்து வசதி இந்திய மாணவர் சங்கம் கோரிக்கை



புதுக்கோட்டை, ஜூலை.23-

பள்ளி, கல்லூரிகளுக்கு மாணவர்கள் எளிதாகச் சென்று வரும் வகையில் காலையும், மாலையும் கூடுதல் பேருந்துகளை இயக்க வேண்டும் என இந்திய மாணவர் சங்கம் வலியுறுத்தி உள்ளது.

இந்திய மாணவர் சங்கத்தின் கந்தர்வகோட்டை ஒன்றியப் பேரவைக்கூட்டம் நேற்று கந்தர்வகோட்டையில் நடைபெற்றது.பேரவைக்கு மாவட்ட துணைச் செயலாளர் ச.பிரியங்கா தலைமை வகித்தார். வலிபர் சங்க முன்னாள் மாவட்டச் செயலாளர் ஜி.பன்னீர்செல்வம், மாணவர் சங்க மாவட்டத் தலைவர் அ.சந்தோஷ்குமார் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். பேரவையை நிறைவு செய்து சங்கத்தின் மாவட்டச் செயலாளர் எஸ்.ஜனார்த்தன் உரையாற்றினார்.

பேரவையில் சங்கத்தின் ஒன்றியத் தலைவராக மதன், செயலாளராக ஹரிராமகிருஷ்ணன் உள்ளிட்ட 11 பேர் கொண்ட ஒன்றியக்குழு தேர்வு செய்யப்பட்டது. இந்தப் பேரவையில் 7 கல்வி நிலையங்களில் இருந்து 40-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் பங்கேற்றனர். பள்ளி, கல்லூரிகளுக்கு மாணவர்கள் எளிதாகச் சென்று வரும் வகையில் காலையும், மாலையும் கூடுதல் பேருந்துகளை இயக்க வேண்டும். கல்வி நிலையங்களில் பாலியல் சீண்டல்களில் இருந்து மாணவிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



சிவகங்கை மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்தில் அமைந்துள்ள வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பறையில் நடைபெற்று வரும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்கு சரிபார்க்கும் இயந்திரங்கள்ஆகியவைகளின் முதல்நிலை சரிபார்ப்பு நிறைவு பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில், பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் வருவாய் கோட்டாட்சியர்கள் பால்துரை (தேவகோட்டை), ரத்தினவேல் (சிவகங்கை) (பொ) உட்பட பலர் உள்ளனர்.

# அமரடக்கியில் புன்னகை அறக்கட்டளை நடத்தும் ஆறாம் ஆண்டு பனைவிதை நடும் திருவிழா




அமரடக்கி,ஜூன்.23-

புதுக்கோட்டை மாவட்டம் அமரடக்கி, ஆவுடையார்கோவில் ஒன்றியம் கதிராமங்களம் ஊராட்சி சாத்தியடியில் 2000 பனைவிதைகள் நடவு செய்யப்பட்டது, புன்னகை அறக்கட்டளை தமிழ் மரம் நட்டல் திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை மாவட்டம் அனைத்து ஊராட்சிகள் தோறும்

1 கோடி பனை விதை நடும் பணியில் தொடர்ந்து செய்து வருகிறார்கள், இந்த நிகழ்வை புன்னகை அறக்கட்டளை நிறுவனத்தலைவர் ஆ.சே. கலைபிரபு தொடங்கி வைத்தனர்

இதில், கரு. முத்து கணேசன், க.சுதா, மு.பாலுசாமி பொ.வீரபாண்டி, பழனிக்குமார், கு.செல்வம், ரா.பாலா, சு.காளிமுத்து, சந்தோஷ் க.கௌசிக் பா.ஆகாஷ் மற்றும் சாத்தியடி கிராமத்தர்கள், இளையர்கள் ஆகியோர் கலந்து கொண்டு ஏரிக்கரை முழுவதும் நடவு செய்தனர். புன்னகை அறக்கட்டளையின் சார்பாக 100க்கும் மேற்பட்ட கிராமங்களில் இதுவரை ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பனை விதைகள் நடவு செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# திருவரங்குளம் ஸ்ரீஅரங்குளநாதர் பெரியநாயகி அம்பாள் கோவிலில் சுவாமிகளுக்கு திருக்கல்யாணம்



புதுக்கோட்டை, ஜூலை.23-

திருவரங்குளம் ஸ்ரீ அரங்குளநாதர் பெரியநாயகி அம்பாள் கோவிலில் ஆடிப்புரத் திருக்கல்யாணம் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

தொடக்க நிகழ்வாக நைனாரி குளத்துக்கரையில் தவமிருந்த அம்பாளை சிவாச்சாரியார்கள் அழைக்கப் போய், எழுமிச்சை பழங்கள் பல்வேறு இலைகளை மூடிக்கொண்டு சிறப்பு குதிரை வாகனத்தில் அழைத்து வந்து, ஊஞ்சலில் வைத்து ஆட்டி நலிங்கு வைத்தனர், அதன்பிறகு அம்பாளை கொண்டு வந்து அரங்குளநாதர் அருகாமையில் வைத்து, அம்பாளின் உறவுக்காரர்கள் என்று சொல்லப்படுகிற வல்லநாடு நகர்த்தார்கள் பட்டுப்புடவை, நகை, பழங்கள் போன்ற சீர்வரிசைகளை வரிசையாக எடுத்து கொண்டு திருமணம் நடைபெறும் இடத்தில் வைத்தனர்.

பிறகு நாதஸ்வர கச்சேரியுடன் திருமாங்கல்யத்துக்கு பல்வேறு வகையான ஹோம பூஜைகள் செய்யப்பட்டு சாமிகளுக்கு காப்பு கட்டுதல் வைபவம் நடந்தது. தேவாரங்கள் பாட சிவாச்சாரியார்கள் அம்பாள் கழுத்தில் திருமாங்கல்யத்தை அணிவித்தனர், அப்போது பக்தர்கள் அட்சயை தன் தலையில் தூவி சுவாமிகளை வழிப்பட்டனர். பிறகு ரோஜா இதழ்களாலான மாலைகள் மாற்றப்பட்டன, திருமாங்கல்யதாரணம் முடிந்தவுடன் 12டிரஸ்டிகளை சேர்ந்த வல்லநாடு நகரத்தார்கள் நகைகளை சுவாமிகளுக்கு சிவாச்சாரிகளிடம் கொடுத்து அணிவித்து, மொய்வாங்குதல், ஆரத்தி எடுக்கப்பட்டதோட, மஹாதீபாராதனை காண்பிக்கப்பட்டு பிரசாதங்கள் வழங்கப்பட்டன.

விழாவிற்கான ஏற்பாடுகளை அறநிலயத்துறை அதிகாரிகள், கோவில் குருக்கள் ஊர் மக்கள், இளைஞர் நற்பணி மன்றம் ஆகியோர் செய்து இருந்தனர், நிகழ்ச்சியில் புதுக்கோட்டை, திருவுடையார்ப்பட்டி, மணியம்பலம், வீரடிப்பட்டி, கொத்தக் கோட்டை, வடகாடு, நெடுவாசல், கீரனூர், பூவரசக்குடி, நெய்வேலி, மழையூர், நெம்மக்கோட்டை வெண்ணாவல்குடி போன்ற பல்வேறு ஊர்களில் இருந்து வந்து திரளான பக்தக்கோடிகள் கலந்து கொண்டனர்.

# ஆலங்குடியில் சாதிமறுப்புத் திருமணம் செய்தோருக்கு வாலிபர் சங்கம் சார்பில் பாராட்டு விழா



புதுக்கோட்டை, ஜூலை.23-

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியில் சாதிமறுப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தின் சார்பில் பாராட்டு விழா நடைபெற்றது.

வாலிபர் சங்கத்தின் திருவரங்குளம் ஒன்றியக்குழு சார்பில் நடைபெற்ற விழாவிற்கு மாவட்டத் தலைவர் எம்.மகாதீர் தலைமை வகித்தார், விழாவில் சாதி மறுப்புத் திருமணம் செய்துகொண்ட தம்பதிகளான பழ.குமரேசன்-சரண்யா, எஸ். செந்தில்குமார்-மாலதி, சாக்கியபிரபு-இந்துமதி, சி.அன்புமணவாளன்-சலோமி ஆகியோர் கவுரவிக்கப்பட்டனர். சாதிமறுப்புத் திருமணம் செய்துகொண்டவர்களைப் பாராட்டி தமுஎகச மாநில துணைத் தலைவர் நந்தலாலா, சிபிஎம் மாவட்டச் செயலாளர் எஸ்.கவிவர்மன், சிஐடியு மாநிலச் செயலாளர் ஏ.ஸ்ரீதர், பத்திரிகையாளர் சங்கத் தலைவர் சு.மதியழகன், தமுஎகச மாவட்டத் தலைவர் ராசி.பன்னீர்செல்வம், செயலாளர்எம்.ஸ்டாலின் சரவணன், பொருளாளர் கி.ஜெயபாலன், திருச்செல்வம், ரமா. ராமநாதன், திருச்செல்வம், ரெங்கநாதன் உள்ளிட்டோர் பேசினர்.

பாராட்டுவிழாவிற்குப் பின்னர் கவிஞர் நந்தலாலா தலைமையில் எஸ்.பி.பாஸ்கர், இரா.தனிக்கொடி, கிலோனாமணிமொழி, அன்னலெட்சுமி ஆகியோர் பங்கேற்ற பட்டிமன்றம் நடைபெற்றது, முன்னதாக மாணவிகளின் நடனநாட்டியநிகழ்ச்சியும் நடைபெற்றது.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# நீதிமன்ற உத்தரவு: மங்களநாடு பட்டியலின மக்கள் கோவிலுக்குள் தரிசனம்

# காவிரி - வைகை - குண்டாறு இணைப்பு திட்டம் காலத்தின் கட்டாயம்





# மருத்துவ மேற்படிப்பு மாணவர்களுக்கான உதவித்தொகை உயர்நீதிமன்றம் திட்டவட்டம்


சென்னை / புதுக்கோட்டை | 23.07.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

23.07.2023 ஞாயிறு

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

பால கங்காதர திலகர் , இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (பி.1856) (இ.1920)



சந்திரசேகர ஆசாத் , இந்திய செயற்பாட்டாளர் (பி.1906) (இ.1931)



எல். சுப்பிரமணியம் , தமிழக வயலின் கலைஞர் (பி.1947)



## இன்றைய நினைவு நாள்

சுப்பிரமணிய சிவா , இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (பி.1884) (இ.1925)



பெ. வரதராஜுலு நாயுடு , இந்திய அரசியல்வாதி (பி.1887) (இ.1957)



ஹரி கிருஷ்ண கோனார் , இந்திய மேற்கு வங்க அரசியல்வாதி (பி.1915) (இ.1974)



இலட்சுமி சாகல் , இந்திய அரசியல்வாதி (பி.1914) (இ.2012)

